இணைப்பு.

(7ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 226-க்கான விடையைக் காண்க.

1956 ஆம் ஆண்டு மாநில சீரமைப்பு சட்டத்தின் 40-வது பிரிவின்படி சென்னை மாநிலத்திற்கு (தற்போது தமிழ்நாடு) மக்கள் அவையில் 41 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்த ஒதுக்கீட்டின்படி 1957-ம் ஆண்டு மற்றும் 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் வகை செய்தவாறு 1961-ம் ஆண்டு மக்கட்தொகை கணக்குப் படி தொகுதிகளைச் சீரமைக்க ''தொகுதிகள் சீரமைப்புக்குழு'' (Delimitation Commission) ஒன்று மைய அரசினால் அமைக்கப் பெற்றது. அக்குழு, மக்கட்தொகை கணக்கின்படி தமிழ் நாட்டிற்கு மக்கள் அவையில் 39 இடங்களை ஒதுக்கியது. இதனால் தமிழ்நாட்டிற்கு மக்கள் அவையில் இரண்டு இடங்கள் குறைந்தன. மக்கள் அவையில் இரண்டு இடங்களை இழந்ததற்குக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தீவிரமாக அமுல் செய்ததினால் ஏற்பட்ட விளைவுதான் என இவ்வரசு கருதியது.

(ஆ) இதைத் தவிர்க்க, 1951 மக்கட்தொகை கணக்கு அடிப் படையில் மக்கள் அவையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டுமென்று இவ் வரசு மைய அரசை 1970-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கேட்டுக் கொண்டது.

இவ்வேண்டுகோளை மைய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இதை வற்புறுத்தும் முகமாக தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கக்கோரி, மத்திய அரசின் திட்டக் குழுவை 1972-ஆம் ஆண்டு மே மாதம் இவ்வரசு கேட்டுக் கொண்டது. திட்டக்குழு, மக்கள் அவையில் இடங்கள் ஒதுக்கீடு பற்றிய பொருள் குறித்து தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் விவாதிப்பது அதன் அலுவலின் கீழ் வராது என்று கூறி, இவ்வர சின் கடிதத்தை மைய அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்தது. மைய அரசு இதற்குப் பதில் அளிக்கையி கருத்தில் இது தங்கல்

1983 பிப்ரவரி 11]

குறித்து மாறுதல் இல்லை என்று அறிவித்தது. இவ்வரசின் மேற் குறித்த வேண்டுகோளை வற்புறுத்தும் வகையில் அமைச்சரவையில் முடிவு செய்தபடி, மறுபடியும் 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், மக்களவையில் 1951ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி மாநில வாரியாக ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை அப்படியே நிலைப்படுத்தி வைக்க வேண்டுமென்றும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனில் மாநிலத்தின் மக்கட்தொகையைக் கணக்கிடும்போது தவிர்க்கப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கைகளை மக்கட்தொகை கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் வற்புறுத்தியது. மைய அரசு இதனை ஏற்றுக்கொள்ளாததினால், மேற்கொண்டு நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS